பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

16. (அ) ஓடாப் பூட்கை நிற் கிழமையோன் கண்டே – விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) பட்டினப்பாலை குறிப்பிடும் தமிழர் வணிக மரபினை ஆராய்க.

17. (அ) புறத்திணைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றுக்கு விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) தமிழர்தம் மரபுச் சொற்களை எழுதுக.

18. (அ) 'எளிமை ஓர் அறம்' – அரண் செய்க.

(அல்லது)

(ஆ) சித்தர்களின் வாழ்வியல் குறித்த சிந்தனைகளைத் தெளிவுறுத்துக.

19. (அ) ஆதி அத்தி நாடகத்தின் உளவியல் கூறுகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஆதி அத்தி நாடகத்தின் பெண் கதை மாந்தர்களின் பண்பு நலன்களை மதிப்பிடுக.

20. (அ) சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகளை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் பெறுமிடம் குறித்துக் கட்டுரைக்க.

———————



**Reg. No. : ..........................................**

**Code No. : 30495** **Sub. Code : C 1 TL 41**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2024.

Fourth Semester

Part I — தமிழ்

பொதுத் தமிழ் – தாள் – IV

(For those who joined in July 2021 – 2022)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மருதத் திணைக்குரிய நிலம்

(அ) மலையும் மலை சார்ந்த இடமும்

(ஆ) காடும் காடு சார்ந்த இடமும்

(இ) மணலும் மணல் சார்ந்த இடமும்

(ஈ) வயலும் வயல் சார்ந்த இடமும்

2. நெய்தல் திணைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர்

(அ) அம்மூவனார் (ஆ) கபிலர்

(இ) பேயனார் (ஈ) பெருங்கடுங்கோ

3. 'பூ' என்கிற ஓரெழுத்து தரும் பொருள்

(அ) மலர் (ஆ) அம்பு

(இ) வண்டு (ஈ) வாள்

4. அதிபர் என்கிற வடமொழிக்கு இணையான தமிழ்ச்சொல்

(அ) தலைவர் (ஆ) செயலர்

(இ) தொழிலதிபர் (ஈ) கடவுள்

5. வேட்டையாடி உணவு பெற்ற மனிதர்கள்

(அ) காடுகண்டார் (ஆ) தொல்தமிழர்

(இ) திராவிடர் (ஈ) வில்லேருழவர்

6. அனைவரும் தன்னைப் போற்றும்படியும் வணங்கும் படியான சக்தியைப் பெறுவது ———— எனப்படும்.

(அ) மகிமா (ஆ) இலகிமா

(இ) ஈசத்துவம் (ஈ) வசித்துவம்

7. புனலாட்டு விழா நடைபெறும் மாதம்

(அ) பங்குனி (ஆ) ஆனி

(இ) ஆடி (ஈ) சித்திரை

8. கழார் நகரம் அமைந்திருக்கும் நாடு

(அ) சேரநாடு (ஆ) சோழநாடு

(இ) பாண்டியநாடு (ஈ) நாஞ்சில்நாடு

9. தமிழரின் வரலாற்றுக் களஞ்சியமாக அமையும் நூல்

(அ) பதிற்றுப்பத்து (ஆ) புறநானூறு

(இ) மதுரைக்காஞ்சி (ஈ) பட்டினப்பாலை

10. 99 வகையான மலர்களைப் பற்றிக் கூறும் நூல்

(அ) முல்லைப்பாட்டு (ஆ) குறிஞ்சிப்பாட்டு

(இ) நெடுநல்வாடை (ஈ) பட்டினப்பாலை



## பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

11. (அ) பிரசம் கலந்த வெண்சுவை தீம்பால் என்ற பாடலின் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்துப் பாடலில், சேர மன்னன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரனினைச் சிறப்பிக்கும் பாங்கினை எழுதுக.

12. (அ) கைக்கிளை, பெருந்திணை என்றால் என்ன? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தருக.

Passport, Fake news, Autograph, Snacks, Speaker

13. (அ) தாயுமான அடிகளின் சீவகாருணியக் கருத்துக்களைத் தருக.

(அல்லது)

(ஆ) தமிழகத் துறைமுகங்கள் குறித்தெழுதுக.

14. (அ) ஆதி அத்தி நாடகத்தின் தலைப்புப்பொருத்தம் காண்க.

(அல்லது)

(ஆ) ஆதி அத்தி நாடகத்தில் காணலாகும் அரசியல் செய்திகளை எழுதுக.

15. (அ) அகநானூற்றின் சிறப்பியல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்கப்பாடல்கள் புலப்படுத்தும் புலவர் அரசர் உறவினை விவரிக்க.



*Nesamony Memorial Christian College, Marthandam*